1971 டிசம்பர் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வேலூரில் நடைபெறும் போலீஸ் பயிற்சிக் கல்லூரிக்கு இன்னும் நவீன வசதிகள் வேண்டும் என்றும், இன்னும் கூடுதலான சுற்றுவளைவு (காம்பவுண்டு) வேண்டுமென்றும், விளையாட்டுத் திடலுக்குப் போதுமான காற்றோட்டமுள்ள வசதி வேண்டும் என்றும் போலீஸ் கமிஷன் தனது அறிக்கையில் கூறியிருந்தது. ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதுபற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

காவலர் தொப்பியிலுள்ள ஆங்கில எழுத்துக்கள்

* 547 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல் துறையினர் தொப்பியில் உள்ள ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில் தமிழ் எழுத்துக்கள் பொருத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆங்கில எழுத்துக்களுக்குப் பதில், தமிழ் எழுத்துக்கள் பொருத்த அரசினிடம் தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால். ஆங்கில எழுத்துக்களிலேயே, தமிழ்நாடு என்ற வார்த்தையைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

திரு. ஏ. சுவாமிநாதன் : இந்தக் காவல் துறையினருக்கு இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிற தொப்பி மிகப் பழமை வாய்ந்த ஒரு டிசைனைக் கொண்டது. அதை மாற்ற தற்கால ரீதியில் கொஞ்சம் கவனித்து, வீர உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தொப்பியை மாற்ற முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது ஒன்றும் குல்லாய் மாற்றுகின்ற வேலை செய்வதாக இல்லை. (சிரிப்பு)

Supply of motor cycles to Sub-Inspectors

* 548 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to provide motor cycle to Sub-Inspectors and Assistant Sub-Inspectors of Police in Tamil Nadu; and

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி. (அ) & (இ) 100 காவல் நிலையங்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதற்கு 14-6-1971 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. 95 மோட்டார் சைக்கிள்கள் வாங்கப்பட்டு 95 காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள ஐந்து மோட்டார் சைக்கிள்களும் விரைவில் வழங்கப்படும்.